23rd October 1964]

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தனியார் இந்தக் கல்லூரியை அமைக்க முன்வரவில்லை என்றால், சர்க்காரே எடுத்து நடத்த முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்கு வேண்டிய நிதி வசதி சர்க்காரிடம் இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : எந்த அளவுக்கு மக்கள் உதவித் தொகை அளிக்க முன்வந்தால், அரசாங்கம் அதை நிறைவேற்ற முன்வரும் என்று அறியலாமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சாதாரணமாக, சுலபமாக எஞ்ஜினியரிங் கல்லூரி வைக்கக்கூடியது அல்ல. அதற்கு சற்றேறக் குறைய ஒரு கோடி ரூபாய் வேண்டியிருக்கும். இது வரையில் பணம் கொடுக்க முன் வந்தவர்கள் 25 சத விகிதம் கொடுத்தால் போதும் என்று இருந்தது. ஆனால் இப்பொழுது 33 சதவிகிதம் கொடுத்தால் கூட சாத்தியமா என்பது சந்தேகம்தான். எல்லாவற்றையும் விட ராச்சிய சர்க்கார் ப்ளான் இட்டத்திற்கும் மேல் செலவழித்திருக்கிறார்கள். ஆகவே இப்பொழுது இன்னொரு எஞ்சினியரிங் கல்லூரி நிறுவவேண்டும் என்றால் அதற்கு வேண்டிய நிதி வசதி நம் சர்க்காரிடம் இல்லை.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தனியார் துறை எந்த இடத்தில் கல்லூரி துவக்க, யார் முன்வந்திருக்கிறார்கள் ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : தனியார் துறை என்பது தனியார் துறைதான். பெயர் சொன்னால் தனியார் துறையாக இருக்காது.

அத்திமேடு கிராம அரிசனங்களுக்கு வாசகசாலை

* 73 கேள்வி.—**திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** கனம் உள் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நெல்லை தாலுகா அத்திமேடு கிராம அரிசனங்களுக்கு வாசகசாலை கட்டிக்கொடுக்கும்படி கனம் அமைச்சர் அவர்களிடமும் பாளையங்கோட்டை பஞ்சாயத்து யூனியன் தலைவரிடமும் மனுக்கள் கொடுக்கப்பட்டது உண்மையா ?

(இ) நெல்லை ஜில்லா நல உரிமை கமிட்டி இது சம்பந்தமாக சிபாரிசு செய்திருக்கிறதா ?

(உ) இவைகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes.

(*b*) The Tirunelveli District Welfare Committee at its meeting held on 17th September 1962 resolved that the construction of a Reading Room at Athimedu Harijan Colony in Tirunelveli taluk be recommended to the Director of Harijan Welfare for sanction.

[23rd October 1964

(c) The Collector of Tirunelveli has been requested to take up the construction of a Reading Room at Athimedu Harijan Colony through the Panchayat Union, Palayamcottai utilising the surplus, if any, under the village works (discretionary) grant.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : சார், அந்த பஞ்சாயத்து யூனியனி லிருந்து தங்களிடத்தில் பணம் இல்லை என்று எழுதி அனுப்பியிருப் பதை ஒட்டி, சர்க்காரிலேயே கட்ட ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பணம் இல்லை என்ற தகவல் எனக்குக் கிடைக்கவில்லை. இது பஞ்சாயத்து யூனியனால் கட்டப்பட வேண்டும். கலெக்டர் கிராம வேலைத் திட்டத்தின் கீழ் அந்த ஊரில் மெடர்னிடி அண்ட் சைல்ட் வெல்பேர் சென்டர் கட்ட ஏற்பாடு ஆகியிருக்கிறது. ரீடிங் ரூம் கட்டவும் ஏற்பாடு செய்யப்படும்.

அறந்தாங்கி தாலூகாவிலே அரிசனங்களுக்கு வீட்டு வசதி

*74 கேள்வி.—**திரு. ஆ. துரையரசன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

அறந்தாங்கி வட்டத்தில் அரிசனங்களுக்கு காலனி வீடுகள் எத்தனை கிராமங்களில் கட்டித்தரப்பட்டுள்ளது ?

THE HON. SRI P. KAKKAN : Seventy-four houses have so far been constructed for Harijans in four villages in Arantangi taluk.

திரு. ஆ. துரையரசன் : மீமிசல் பக்கத்தில் ரூ. 52,000 செலவில் கட்டப்பட்ட 48 வீடுகள் பழுதுபட்டு விட்டதால் அதில் அரிசனங்கள் குடியேற முடியவில்லை. அது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திரு. பூ. கக்கன்: தனிக் கேள்வி போடவேண்டும்.

கொல்லி மலையில் ஆசிரியர்களுக்குக் குடியிருப்பு வசதி

*75 கேள்வி.—**திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

கொல்லிமலையில் ஆசிரியர்களுக்கு "மலைச்சாதியினர் அபி விருத்தி நிதியிலிருந்து" வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : பஞ்சாயத்து யூனியன் கல்வி நிதியி லிருந்து கொல்லி மலையில் இரண்டு ஆசிரியைகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தொகையைப் பின்னர் மாநில அரசாங்கம் மேற்படி நிதிக்கு ஈடு செய்யும். இதைத்தவிர கொல்லிமலையில் மலைச் சாதியினர் வளர்ச்சிக்கான அபிவிருத்தி வட்டார நிதியிலிருந்து அல்லது ஹரிஜன நல நிதியி யிலிருந்து ஆசிரியர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் எதுவுமில்லை.